## சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை

# சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்

## மானியக் கோரிக்கை எண். 15



## அறிவிப்புகள் 2026 – 2027


**Dr. வே.க.ராஜீவ்**

சுற்றுச்சூழல் மற்றும்
காலநிலை மாற்றத்துறை அமைச்சர்

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம்**
**மற்றும் வனத்துறை**

**சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்**

**மானியக் கோரிக்கை எண். 15**

# அறிவிப்புகள் 2026 - 2027

## Dr. வே.க. ராஜீவ்

**சுற்றுச்சூழல் மற்றும்**
**காலநிலை மாற்றத்துறை அமைச்சர்**

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

## அறிவிப்புகள் 2026 - 2027

## 5. நிகழ்நேர சுற்றுச்சூழல் கண்காணிப்பு மற்றும் விரைவு நடவடிக்கைக்காக ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் ஐந்து நடமாடும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு வாகனங்கள் இயக்கப்படும்.

காற்று, நீர், ஒலி சார்ந்த சுற்றுச்சூழல் அளவுருக்களை நிகழ்நேரத்தில் கண்காணிப்பதற்கும், தொழிற்சாலை ஆய்வுகள், மாசுபாடு தொடர்பான நிகழ்வுகள் மற்றும் பொதுமக்கள் புகார்களின் போது விரைவான அறிவியல் அடிப்படையிலான மதிப்பீடு செய்து நடவடிக்கை மேற்கொள்ளவும், நவீன சுற்றுச்சூழல் பகுப்பாய்வுக் கருவிகள் பொருத்தப்பட்ட ஐந்து நடமாடும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு வாகனங்கள் ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் இயக்கப்படும்.



## 6. சுற்றுச்சூழல் கண்காணிப்பு மற்றும் அவசரநிலை நடவடிக்கை அமைப்புகளை வலுப்படுத்தும் நோக்கில் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் ஐந்து அவசரகால பதிலளிப்பு மையங்கள் நிறுவப்படும்.

சுற்றுச்சூழல் கண்காணிப்பு மற்றும் அவசரகால நடவடிக்கைகளை வலுப்படுத்தும் வகையில், சுற்றுச்சூழல் கண்காணிப்பு அமைப்புகளை ஒருங்கிணைத்து நிகழ்நேர கண்காணிப்பு, முன்னெச்சரிக்கை மற்றும் விரைவான நடவடிக்கைக்கு உதவிடவும் மற்றும் தமிழ்நாடு மாநில அவசரகால செயல்பாட்டு மையத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு, சுற்றுச்சூழல் சார்ந்த பேரிடர்கள் மற்றும் அவசர காலங்களின்போது தகவல் பரிமாற்றம் மற்றும் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஐந்து அவசரகால பதிலளிப்பு மையங்கள் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.



## 7. காற்று தர கண்காணிப்பை வலுப்படுத்தும் நோக்கில் ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் 80 இடங்களில் உணரிகை (சென்சார்) அடிப்படையிலான தொடர் சுற்றுப்புற காற்று தரக் கண்காணிப்பு நிலையங்கள் நிறுவப்படும்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் காற்று தர கண்காணிப்பை வலுப்படுத்தும் நோக்கில், முக்கிய காற்று மாசுபடுத்திகள் மற்றும் வெப்பநிலை, ஈரப்பதம் போன்ற அளவுருக்களை நிகழ்நேரத்தில் தொடர்ந்து கண்காணிப்பதற்கும், இத்தரவுகளை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் மின்னணு தகவல் பலகைகள் மூலம் வெளியிடவும், மாநிலம் முழுவதும் 80 இடங்களில் உணரிகை (சென்சார்) அடிப்படையிலான தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்கள் ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.



## 8. தொழிற்சாலைகளுக்கான சுற்றுச்சூழல் செயல்திறனை மேம்படுத்த தன்னார்வ பசுமை மதிப்பீடு சான்றிதழ் பெறும் தொழிற்சாலைகளுக்கு ஊக்க சலுகைகள் அளிக்கப்படும்.

தொழிற்சாலைகளின் சுற்றுச்சூழல் செயல்திறனை மேம்படுத்தவும், பசுமைத் தொழில்நுட்பம், இயற்கை வளப்பாதுகாப்பு, தூய்மையான உற்பத்தி மற்றும் நிலைத்த தொழிற்துறை வளர்ச்சி ஆகியவற்றை ஊக்குவிக்கவும், தொழிற்சாலைகளுக்கான தன்னார்வ பசுமை மதிப்பீட்டில் அதிகளவில் பங்கேற்பை மேம்படுத்தவும், வழங்கப்படும் பசுமை மதிப்பீடு (பிளாட்டினம், தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலம்) சான்றிதழ்களின் அடிப்படையில் ஊக்க சலுகைகள் வழங்கப்படும்.



## 9. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு சொந்தமான அலுவலகங்களில், நிலைத்த பசுமைக் கட்டட முன்முயற்சிகள் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்குச் சொந்தமான அலுவலகக் கட்டடங்களில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாட்டை அதிகரித்தல், மின்சாரச் செலவைக் குறைத்தல், நீர்வளத்தைப் பாதுகாத்தல் மற்றும் கார்பன் உமிழ்வைக் குறைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில், கூரைமேல் சூரியஒளி மின் உற்பத்தி அமைப்புகள், குளிர் கூரை அமைப்புகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய நிலைத்த பசுமைக் கட்டட முன்முயற்சிகளை ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.




**Dr. வே.க. ராஜீவ்**
சுற்றுச்சூழல் மற்றும்
காலநிலை மாற்றத்துறை அமைச்சர்

# பிறப்பொக்கும்
# எல்லா உயிர்க்கும்!

